666 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அல்லது 333 அகதிகள் குடும்பங்களைக் குடியமர்த்த இத் திட்டம் வகை செய்கிறது. 31–12–1971 வரை, இத் திட்டத்திற்காக ரூ. 8·92லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 272.60 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இலங்கை அகதிகள் 62 பேர் இதில் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர். 28 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 98 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : அவர்கள் ரப்பர் தொழிலிலும் தேர்ச்சிப் பெற்றிருக்கிருர்கள். ஆகவே அவர்களுக்கு ரப்பர் தோட்டம் ஏற்படுத்த வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். பர்மாவில் இருந்து வரக்கூடியவர்களுக்குச் சிறு வியாபாரம், விவசாயம் ஆகிய இரண்டும் தான் பழக்கமான தொழில். இலங்கையில் இருந்து வருகிறவர்களுக்குத்தான் ரப்பர் தோட்டத்தொழிலில் நல்ல பழக்கம் இருக்கிறது. பர்மாவில் இருந்து வருகிறவர்களுக்கு சிறு கடைகள் வைக்க கடன் தொகை உதவப்படுகிறது. விவசாயம் செய்யவும் வசதிகள் தரப்படுகின்றன.

Apatite in Pennagaram Block.

*783 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that Apatite (a fertiliser preparing new material) is found in large quantities at Pennagaram Block, Dharmapuri District ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். தர்மபுரி மாவட்டத்தில் ஓகனேகல்லுக்கருகில் அப்படைட் என்னும் கனிப்பொருள் சிறு சிறு துகள்களாகவும் படிவங்களாகவும் கேல்ஷிபைரஸ் என்னும் பாறையில் காணப்படுகிறது. மேற்படி கனிவளத்தைக் கண்டறிய மாநில புவி ஆராய்ச்சிப் பிரிவு விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறது. இவ் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நீலகிரி மலையில் தேன் இரும்பு

* 784 வினு— திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மலைத்தொடரில் கிடைக்கின்ற தேன் இரும்பைக் கொண்டு மேட்டுப்பாளையத்தில் தேன் இரும்பு உருக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?